Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

நாம் சிந்திக்கும்போதும்
நன்மையானதையே
சிந்திக்க வேண்டும்..

# ஒளி ஏக்காளம்

VOL . 3 ISSUE . 7 தனிப்பிரதி ரூ 20/= பிப்ரவரி 2010

நீங்கள் கஷ்டப்படும்போதும்
கர்த்தருக்கு
நன்றி செலுத்துவீர்களென்றால்,
அதுவே கர்த்தரை நம்புவதை
வெளிப்படுத்துவதாகும்..

இந்த மாதம் ரசித்த கார்ட்டூன்




நன்றி : 'THE HINDU' ஜனவரி 4,2010



எவன் நன்மை செய்கிறானோ
அவனுக்கு மகிமையும் கனமும்
சமாதானமும் உண்டாகும்

– ரோமர் 2:10

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony, Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah, Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# நன்மை

நிஜா
கென்னடி

முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்.

- ரோமர் 2:10

நன்மை செய்கிற யாவருக்கும் தேவன் மகிமையையும், கனத்தையும், இருதயத்தில் சமாதானத்தையும் தருவார். மறுபடியும் பிறந்த மனுஷன், மகிமை, புகழ், அழியாமை ஆகியவற்றை அறிந்ததினால், பரலோகத்தை விரும்புகிறான். இதனால் நித்திய ஜீவனைப் பற்றியும் அறிந்து கொள்கிறான். இந்த உலகத்தில் வாழும் வாழ்க்கையின் பலனாக பரலோகத்தை அடையலாம் என்பதையும், இந்த உலக வாழ்வோடு நமது வாழ்க்கை முடிவதில்லை, பரலோகத்திற்கு செல்வோம் என்பதையும் அறிந்து கொள்வதால் அவனுக்குள் சமாதானம் உண்டாகிறது. காண்கின்ற இந்த உலகம் தற்காலிகமானது, அழிந்துபோகும் என்பதையும், அழியாதது பரலோக வாழ்வுதான் (நித்திய ஜீவன்) என்பதையும் அறிந்து கொள்வதால் தெய்வீக சமாதானம் அவனுக்குள் உண்டாகிறது.

பொல்லாங்கு செய்கிற யாவருக்கும் உபத்திரவமும், துன்பமும் உண்டாகும். சமாதானத்தை இழந்து போவார்கள். அதனால் அவர்களுடைய ஆத்துமா சோர்ந்து போகும். பாவம் எப்பொழுதும் அவர்களை பின் தொடரும். எப்போதும் மன நிம்மதியில்லாமல் இருப்பார்கள். நம்முடைய தேவன் பட்சபாதமில்லாதவர். ஒவ்வொரு மனிதனின் கிரியைகளின்படி, பாரபட்சமின்றி நியாயம் வழங்குகிறவர். ஆகையால் இந்த உலகத்தில் நாம் வாழும்போது, தேவ பயத்தோடுகூட நடந்து கொள்ள வேண்டும். ஒருவரிடம் ஆதரவாகவும், சாதகமாகவும், மற்றவரிடம் சாதகமற்றும், ஆதரவு அளிக்காமலும் மனிதர்கள் நடந்து கொள்வார்கள். நியாயமற்ற முறையில் ஒருவருக்கு, மற்றவருக்கு அளிப்பதைவிட மேலான ஆதரவு கொடுத்து பாரபட்சம் காட்டுவது தவறு. சமுதாயத்தில் ஒருவர் உயர்ந்த நிலையிலோ அல்லது உயர்ந்த பதவியிலிருந்தாலோ, பணம் படைத்தவர்களாயிருந்தாலோ, இந்த உலகம் அவர்களுக்கு முக்கியத்துவம்



கொடுத்து அவர்களுக்கு ஆதரவாக இருக்கும். நாம் எப்பொழுதும் எந்த ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாக நன்கு ஆராய்ந்து சிந்தித்து செயல்பட வேண்டும். நாம் உலகத்தாரை போலில்லாமல் இயல்பாக நடந்துகொள்ள வேண்டும். யார் மனதும் பாதிக்காதபடி நியாயமாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். தேவன் ஜனங்களை எப்படி நியாயமாக, நேர்மையாக நடத்துவாரோ அதுபோல நாமும் நேர்மையாக, நியாய உணர்வுடன் செயல்பட தேவன் விரும்புகிறார்.

## நித்திய ஜீவன்

சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.

- ரோமர் 2:7

சிலர் கர்த்தருடைய சித்தத்தையே செய்வேன் என்று பொறுமையோடு காத்திருந்து, மற்றவர்கள் தன்மேல் குறைகூறினாலும் விடாபிடியாக அதையே செய்வேன் என்று செய்து முடிப்பார்கள். இவர்கள் தேவனுடைய மகிமைக்காகவும், கனத்துக்காகவும் என்றும் அழிவற்ற வாழ்வுக்காகவும் (நித்திய ஜீவன்) வாழ்கிறார்கள். நல்ல காரியங்களை தொடர்ந்து செய்கிறார்கள். அவர்களுக்கு தேவன் நித்திய வாழ்வை தருகிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எந்த மனிதனும் இரட்சிக்கப்படுவான். நாம் நன்மையை செய்வதனால் மாத்திரம் நீதிமானாக முடியாது. முதலாவது நம் ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நம் பாவங்களை கழுவி சுத்திகரித்து, நம்மை நீதிமானாக்க முடியும். நமது ஆத்துமா இரட்சிக்கப்படுவதும், நாம் நீதிமானாக்கப்படுவதும், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில்தான் உள்ளது. நாம் எதையாவது நல்லதை செய்வதனால் நீதிமானாக முடியாது. இயேசுவை அறியாத புறஜாதியார் தங்களுடைய பாவங்களை நிவர்த்தி செய்வதற்காக ஏழை ஜனங்களுக்கு அன்னதானமும், தானதர்மங்களும் செய்கிறார்கள். இப்படி செய்வதனால், அவர்களுடைய பாவகறைகள் நீக்கப்பட முடியாது.

நாம் நம்முடைய வாழ்க்கையை முற்றிலுமாக இயேசுகிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து அவரையே சார்ந்து வாழவேண்டும். நாம் அவருக்கு பிரியமாய் இருந்து எப்பொழுதும் அவருடைய சித்தத்தையே செய்ய வேண்டும். சிலர் சுயநலவாதிகளாய், சத்தியத்தின்படி வாழாமல், பாவவழியில் நடப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது, தேவ கோபாக்கினை கடந்துவரும். இவர்கள் வேதவார்த்தைகளுக்கு கீழ்ப்படியாததால், என்றென்றுமான (நித்திய ஆக்கினை) தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள். இந்த உலகத்தில் அநீதியாய் வாழ்ந்து,

அநீதியாய் தீர்ப்பு செய்தவர்களுக்கும், நிச்சயமாய் தண்டனை கிடைக்கும். (ரோமர் *2:8,9*). தேவனுடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? (1பேதுரு *4:17*).

நித்திய ஜீவன் என்பது, தேவனோடு இணைந்து வாழும் வாழ்க்கையாகும். பிதாவாகிய தேவனையும், அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான் *17:3*). ஒருவன் இயேசுகிறிஸ்துவின் மேல் அன்பாயிருந்தால், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பான். அவனிடம் பிதாவானவர் அன்பாயிருப்பார். பிதாவும், குமாரனும் அவனில் வந்து வாசம் பண்ணுவார்கள். நமது நற்செயல்களால் நாம் நித்திய ஜீவனை பெறாமல், விசுவாசத்தினால் பெறுகிறோம்.



> தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
>
> - யோவான் 3:16

மறுபடியும் பிறக்கும் அனுபவம், நம்மை புதுமனிதனாக மாற்றுகிறது. நம்முடைய பழைய சுபாவங்கள் அகற்றப்பட்டு, நமது நோக்கங்களும், சொற்களும், செயல்களும் மாறிவிடுகிறது. தகுதியில்லாத நம்மீது இயேசுகிறிஸ்து அன்புகூர்ந்து அவரை விசுவாசிக்கிற எல்லோரும் நரகத்திற்கு போகாமல் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளச் செய்தார்.

> தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுண்டு.
>
> - நீதிமொழிகள் 14:22

நமது சிந்தனைகளிலும் நன்மையையே யோசிக்க வேண்டும். நன்மையை யோசிப்பவர்களின் சொற்களும் செயல்களும் நன்மையாக அமையும். தீமையை யோசிப்பவர்கள் பாவம் செய்கிறார்கள். ஒருவன் நன்மை செய்வதால் அநேகர் அவனை நேசித்து நண்பர்களாகிறார்கள். நமது வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். அன்பில்லாதவர்கள் மற்றவர்களுக்கு தீமை செய்ய நினைத்து, அதன்படி செயல்படுவார்கள். நாம் செய்யும் செயல்கள் நல்லவைகளாக இருக்கிறதா என்று யோசித்து பார்ப்போம்.



மற்றவர்களுக்கு தீமை செய்யும் எண்ணத்தை முற்றிலுமாக விட்டுவிட வேண்டும். நாம் மற்றவர்களுக்கு செய்யும் நன்மைகளை யாருக்கும் விளம்பரப்படுத்தக் கூடாது. பரலோக பிதாவை மட்டும் மகிமைப்படுத்துவதாக இருக்க வேண்டும். தவறுகளுக்கு ஒத்துப்போகும் போதும், தவறுகளை எதிர்த்து பேசாத போதும் நற்கிரியைகளைச் செய்ய தவறுகிறோம். நம்முடைய செயல்கள் தேவனுடைய அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதுவே தேவனை மகிமைப்படுத்தும் காரியமாகும். நற்செயல்களை செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நற்செயல்கள் செய்வதினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்கள் நற்செயல்களை செய்வார்கள்.

> **தவறுகளுக்கு ஒத்துப்போகும் போதும், தவறுகளை எதிர்த்து பேசாத போதும் நற்கிரியைகளைச் செய்ய தவறுகிறோம்**

## நன்மை செய்யாததினால் பின்தொடரும் பாவங்கள்

காயின், ஆபேல் என்பவர்கள் முதல் மனிதனாகிய ஆதாமின் குமாரர்கள். காயீன் விவசாயியாகவும், ஆபேல் மேய்ப்பவனாகவும் இருந்தார்கள். காயீன் தன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாக படைத்தான். ஆபேல் தன் மந்தையில் சிறந்த ஆடுகளை கர்த்தருக்கு காணிக்கையாக படைத்தான். ஆபேலையும், அவன் காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக் கொண்டார். ஆனால், காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவன் மிகவும் கோபமடைந்தான். வெறுப்படைந்தும், மிகவும் சோர்ந்தும் இருந்தான். கர்த்தர் அவனை நோக்கி:

> நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும், அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும் நீ அவனை ஆண்டுகொள்வாய் என்றார்.
>
> - ஆதியாகமம் 4:7

கர்த்தர் காயீனிடம் பேசினார். ஆனால், காயினோ கர்த்தர் கூறியதை கேட்க மறுத்தான். தன்னை திருத்திக் கொள்ள முன்வரவில்லை. காயீன் தன் சகோதரனை வயல்வெளிக்கு அழைத்துச் சென்று அவன்மேலுள்ள பொறாமையினால், எரிச்சலினால் கொன்று போட்டான். பாவம் ஆளுகை செய்தது, துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது.அதை துர்ச்சிந்தையோடே செலுத்தினாலோ எத்தனை அதிகமாய் அருவருக்கப்படும் (நீதிமொழிகள் *21:27*).

கர்த்தர் மேலுள்ள அன்பினால் நிறைந்து காணிக்கையை செலுத்த வேண்டும். முழுமனதோடு மனமுவந்து கொடுக்க வேண்டும். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்கு செலுத்தினான். தேவன் தன் காணிக்கையை ஏற்றுக் கொள்வார், பலனளிப்பார் என்ற விசுவாசத்தோடு சிறந்ததை தேவனுக்கு செலுத்தினான்.

நாம் நன்மை செய்யும்போது, தேவனுக்கு பிரியமானவர்களாக இருப்போம். கர்த்தர் நம்மை உயர்த்துவார். ஆனால், நாம் தீமை செய்யும்போது, பாவமும், சாபமும் நம் வாழ்வில் வரும். காயீன், ஆபேலை கொன்றதினால் கொலைபாதகனானான். நமது பாவம் நம்மை அடக்கி ஆளவிரும்பும். நாம் நன்மை செய்யாமல் இருக்கும்போது, பாவம் நம் வாசலண்டையே பதுங்கியிருக்கும். நம்மிடமுள்ள குறைகளை யாராவது குறிப்பிட்டு சொல்லும்போது, நம்மை திருத்திக் கொள்ள முன்வருவோமா? அல்லது உண்மையில்லை என்று ஏற்றுக் கொள்ள மறுப்போமா?



நன்மைக்கு தீமை செய்கிறவன் எவனோ அவன் வீட்டை விட்டு தீமை நீங்காது.

- நீதிமொழிகள் 17:13

நமக்கு நன்மை செய்கிறவர்களுக்கு, நாம் தீமை செய்யக்கூடாது. அப்படி தீமை செய்தால், அவர்களது எஞ்சிய வாழ்க்கை முழுவதும் துன்பமாக இருக்கும். தீமை அவர்களை விட்டு நீங்காது. நம்முடைய நண்பர்கள், உறவினர்கள், நம்மால் நன்மையை பெற்றவர்கள் நமக்கு எதிராக பேசி, நம்மை துன்பப்படுத்தும்போது, நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களை எதிர்த்து போராடக்கூடாது.

என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள்; நானோ ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

- சங்கீதம் 109:4

நான் அந்த ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்தேன்; ஆனால், அவர்களோ எனக்கு தீய காரியங்களைச் செய்கிறார்கள். நான் அவர்களை நேசித்தேன், ஆனால், அவர்களோ என்னை பகைத்தார்கள் என்று தாவீது கூறுகிறான். தாவீது தன்னை பகைத்த எதிராளிகளுக்கு எதிராக போராடாமல், தேவனை நோக்கி ஜெபித்து தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று



மன்றாடுகிறான். தாவீதிடமிருந்து நன்மையை பெற்ற ஜனங்கள், அவனுக்கு எதிராக தீமையை செய்து, அவனுக்கு எதிர்த்து நின்றார்கள். பிரியமானவர்களே, உங்களிடமிருந்து நன்மையை பெற்றவர்கள் உங்களுக்கு எதிராக செயல்படுகிறார்களா? உங்களை பகைக்கிறார்களா? உங்கள் மேல் குற்றஞ்சுமத்துகிறார்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தருக்கு மறைவானது ஒன்றும் இல்லை. அவர் உங்களுக்காக யுத்தம் செய்வார். கர்த்தர் உங்களுக்காக வழக்காடுவார். மனிதர்கள் உங்களுக்கு தீமை செய்யலாம். ஆனால், கர்த்தர் அந்த தீமையை நன்மையாக மாற்றிப்போடுவார்.

நாம் நன்மை செய்து பாடுகளை அனுபவிக்க நேர்ந்தால் பொறுமையோடு சகித்துக் கொள்ளவேண்டும். நாம் நீதியாக நடந்துகொள்ளும்போது, அநியாயமாய் நடப்பவர்கள் வெகுண்டு எழுந்து நமக்கு எதிராக தீமையான காரியங்களை செய்வார்கள். நாம் எந்த மனிதருக்கும், பயப்படக்கூடாது. கலங்கக்கூடாது. நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 பேதுரு *2:15*).

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிற படியால், அவர் சென்ற பாடுகளின் பாதையில் நாமும் சென்றாக வேண்டும். அவர் பாவஞ்செய்யவில்லை. அவரது வாயிலிருந்து எந்த பொய்யும் வரவில்லை. மக்கள் அவரை அவதூறாகப் பேசி அவமதித்தார்கள். ஆனால், அவர் திரும்ப பதில் பேசாமலிருந்தார். அவர் நியாயமாய் தீர்ப்பு செய்கிற தேவனுக்கு தம்மை ஒப்புவித்தார். அதேபோல் நாமும் யார் நம்மை எதிர்த்தாலும், பகைத்தாலும் தேவனிடம் அதைவிட்டு விடவேண்டும். அவர் பதில் செய்வார். நாம் பதில் செய்கிறோமென்று தீமை செய்துவிடக்கூடாது.

நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோட சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும்.

- 1 பேதுரு 2:20

நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் *12:21*). நமக்கு எதிராக பேசுகிறவர்களையும், செயல்படுகிறவர்களையும், நமக்கு துன்பத்தை கொடுக்கக்கூடியவர்களையும் மனப்பூர்வமாக மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். கிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னித்ததை நினைவில் கொண்டு, நமக்கு எதிர்த்து நிற்பவர்களை மன்னிப்போம்.

## தீமைக்கும் நன்மை

கர்த்தர் தாவீதோடுகூட இருக்கிறார் என்பதை சவுல் உணர்ந்து கொண்டான். தனக்குப்பின் தாவீதுதான் ராஜாவாவான் என்பதையும் அறிந்திருந்தான். ஆனாலும்கூட சவுல் தாவீதை கொல்ல முயற்சி செய்து கொண்டிருந்தான். ஒரு

சமயம் சவுலும், அவனுடைய மனுஷரும், தாவீதையும், அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாக அவர்களை வளைந்து கொண்டார்கள். அந்த நேரம் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து பெலிஸ்தியர் தேசத்தின் மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள்; நீர் சீக்கிரமாய் வாரும் என்றான். அதனால் சவுல் தாவீதை பின்தொடருவதை விட்டுவிட்டான். இக்கட்டான வேளையிலும் கர்த்தர் தாவீதை பாதுகாத்தார். மறுபடியும் சவுல் மூவாயிரம் பேரைக் கூட்டிக் கொண்டு தாவீதை தேடப் போனான். அப்பொழுது தாவீது,



தன்னை கொல்ல வந்த சவுல் ஒரு கெபியில் இருப்பதைக் கண்டு, சவுலைக் கொல்லாமல், அவனுடைய ஆடையின் ஓரத்தை மட்டும் வெட்டியெடுத்துக் கொண்டான். கர்த்தரை தாவீது நேசித்தபடியால், கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை கொலை செய்யாமல் விட்டுவிட்டான். தன்னுடைய மனுஷரும் சவுலை கொல்லாதபடி தடுத்தான். பின் தாவீது, சவுலுக்கு பின் சென்று, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தான் வெட்டியெடுத்த சவுலின் சால்வையின் தொங்கலை சவுலிடம் காண்பித்து, கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, என் காரியத்தில் உமக்கு நீதியை சரிகட்டுவாராக என்று, சவுலை காப்பாற்றியதை எடுத்துக் கூறினான். அப்பொழுது சவுல்,

> தாவீதைப் பார்த்து; நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமை செய்தேன்.
>
> - 1 சாமுவேல் 24:17

தாவீதுக்கு, தன்னை கொலை செய்ய தேடின சவுலை, கொல்லக்கூடிய தருணம் வந்தபோதும், அவன் தீமை செய்யவில்லை. நன்மையே செய்தான்.

## தீமையை தடுக்கும் தேவன்

யாக்கோபு தனது மாமனாகிய லாபானால் பல முறைகள் ஏமாற்றப்பட்டான். அவன் லாபானுடைய ஆடுகளை மேய்த்து வந்தான். ஆனால், லாபானோ யாக்கோபை வஞ்சித்து, அவன் சம்பளத்தை பத்து முறை மாற்றினான் (ஆதியாகமம் *31:7*). யாக்கோபு பொறுமையுடன் காத்திருந்தான். லாபான் அவனுக்கு தீங்கு செய்வதற்கு கர்த்தர் இடங்கொடுக்கவில்லை. யாக்கோபு மிகவும் விருத்தியடைந்ததைக் கண்டு லாபானும், அவனது குமாரர்களும் பொறாமை



கொண்டனர். தங்கள் தகப்பனுக்குரிய அனைத்தையும் அவன் எடுத்துக் கொண்டான், அதனால் செல்வந்தனாகிவிட்டான் என்று லாபானின் மகன்கள் அவனை எதிர்த்து சொல்வதை



யாக்கோபு கேட்டான். லாபான் முன்புபோல தன்னிடம் அன்பாயில்லை என்பதையும் உணர்ந்து கொண்டான். கர்த்தர் யாக்கோபிடம், ''நீ உன் சொந்த தேசத்திற்கு போ, நான் உன்னோடே கூட இருப்பேன்'' என்றார். அதனால் யாக்கோபு தன் குடும்பத்தாருடனும், மந்தைகளுடனும், தனக்குரிய எல்லாவற்றுடனும், தன் தேசத்திற்கு லாபானிடம் சொல்லாமல் கிளம்பிவிட்டான். லாபான் யாக்கோபு போனதை அறிந்து, உடனே தன் ஆட்களுடன் யாக்கோபை துரத்திக் கொண்டு போனான்.

> அன்று ராத்திரி தேவன் சீரிய தேசத்தானாகிய லாபானுக்கு சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்.
>
> - ஆதியாகமம் 31:24

பாருங்கள், கர்த்தர் லாபானை எச்சரித்தார். யாக்கோபிடம் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் எச்சரிக்கையோடு பேசச் சொன்னார். கர்த்தர் தம்மை தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். கர்த்தர் லாபானுக்கு எச்சரிக்கை கொடுத்ததுபோல நமக்கு எதிராக வரும் ஒவ்வொருவருக்கும், நமக்கு நன்மை செய்யும்படி எச்சரிக்கை கொடுப்பார். எச்சரிக்கையை மீறுகிறவர்களுக்கு தண்டனைகளையும் கொடுப்பார்.

## நன்மை செய்கிறவன் இல்லை

> எல்லோரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.
>
> - சங்கீதம் 14:3

கர்த்தரை குறித்த பயம் ஜனங்களுக்கு இல்லாததினால், தீமையான காரியங்களை செய்து தேவனுடைய வழியை விட்டு விலகி தங்கள் சுயவழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். தேவன் இல்லை என்று அநேகர் சொல்லுகிறார்கள். அவர்களை மதிகெட்டவன் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் இருக்கிறார் என்று சொல்லும் பலர், அவர் இல்லாததுபோல நடந்து கொண்டு நன்மையான

காரியங்களைச் செய்யாமல் தீமையானவற்றையே செய்கிறார்கள். இவர்களும் தேவன் இல்லை என்று கூறும் மதிகெட்டவர்களைப்போலத்தான் கர்த்தரை நம்பாமல் இருக்கிறார்கள். தேவனை தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று, கர்த்தர் பரலோகத்திலிருந்து ஜனங்களைப் பார்த்தார். நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை. எல்லோரும் தேவனை விட்டு விலகிப் போனார்கள். இவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்புகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக இல்லை. கர்த்தருக்கே விரோதமாய் எழும்புகிறார்கள். ஏனென்றால் கர்த்தர் தம் பிள்ளைகளோடு கூட இருக்கிறார். ஆகையால் அவருடைய பிள்ளைகளை எதிர்த்து நின்று அவர்களுடைய ஆலோசனையை அலட்சியம் செய்கிற தீய ஜனங்கள் யாவரும் முடிவில் தோல்வியடைவார்கள். (சங்கீதம் *14:4-6*). கர்த்தர் நல்லோரைத் தேடுகிறார். கர்த்தர் தீயவரையும் கொடியோரையும் வெறுக்கிறார் (சங்கீதம் *11:5*). இந்த உலகத்தில் எந்த மனிதனும் பரிசுத்தவான் அல்ல. எல்லா மனிதர்களும் தேவனுக்கு முன்பாக பாவிகள். நம் பாவங்களை மன்னிப்பதற்காக, இயேசு கிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தார். தான் ஒரு பாவி என்று உணரும் யாவரும், இயேசு கிறிஸ்துவிடம் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பை பெற்றுக் கொள்ளும்போது, அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாகி, பாவத்திலிருந்து விடுதலை பெறுவார்கள்.

> **நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.**
>
> **- நீதிமொழிகள் 3:27**

நன்மை செய்யும் வாய்ப்பு நமக்கு வரும்போது நம்மால் முடிந்த உதவியை தேவையோடு இருப்பவர்களுக்குச் செய்யவேண்டும். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக தேவன் மேல் விசுவாசம் கொண்டுள்ள குடும்பங்களுக்கு நன்மை செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகளுக்கு, தேவை ஏற்படும்போது, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் (ரோமர் *12:13*). விசுவாசிகள் நற்கிரியைகளைச் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யவில்லையென்றால் அவன் பாவியாகிறான். இவ்வுலக வாழ்க்கையில் ஆர்வமுள்ளவர்கள் தீமைக்கு தீமையையே செய்வார்கள். பரலோகத்தை நோக்கிச் செல்பவர்கள் தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்வார்கள். நாம் எப்படியாக இருக்கிறோம்?

இயேசு கிறிஸ்துவை, தேவன், பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே, அவர் நன்மை செய்கிறவராகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் (அப்போஸ்தலர் *10:38*). நாமும் இயேசுகிறிஸ்துவைப் போல் மற்றவர்களுக்கு நன்மை செய்கிறவர்களாக மாற வேண்டும். சோர்ந்து போகாமல் நன்மையை செய்யும்போது, ஏற்ற காலத்தில் செய்த நன்மையின் பலனை பெற்றுக் கொள்வோம். தீமையை விதைத்தால் தீமையையே அனுபவிப்போம். நமது நற்செயல்களுக்கு நிச்சயம் பலனுண்டு. நன்மை செய்வதே நமது வாழ்வின் முக்கியமான நோக்கமாயிருக்கட்டும்.

தேவனுக்கு பயந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பது எல்லா மனுஷர்மேல் விழுந்த கடமை. நாம் செய்யும் அனைத்தையும், நம் ரகசியமான செயல்கள் அனைத்தையும் நமது அனைத்து நற்செயல்களைப் பற்றியும், அனைத்து தீய செயல்களைப் பற்றியும், ஜனங்கள் செய்யும் அனைத்தையும் கர்த்தர் நியாயத்திலே (பிரசங்கி *12:14*) கொண்டு வந்து நிறுத்துவார். ஆதலால் நீ உன் சகோதரனை குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். (ரோமர் *14:13*). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவரை ஒருவர் குறைகூறுவதை கர்த்தர் வெறுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. இருளில் மறைந்திருக்கிறவைகளை, அவர் வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். ஆகவே கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகி, பகைக்கிறவர்களுக்கும் நன்மையையே செய்வோம். கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பும், கிருபையும், சமாதானமும் உங்களோடிருப்பதாக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**




www.bobgass.com

- ❒ அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் டாலர்தான் வியாபாரத்தின் அடிப்படை. ஐரோப்பாவில் ஈரோதான் விற்பதற்கும், வாங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அதுபோல தேவனுடைய ராஜ்யத்தின் அடிப்படை விசுவாசமே.
- ❒ எதிர்பார்ப்பில்லாமல் விசுவாசமாயிருப்பது பயனற்றது.கர்த்தர், தாம் பார்ப்பதையே நம்மிடம் சொல்லுகிறார். கர்த்தர் சொல்வதையே நாம் விசுவாசித்து, எதிர்பார்க்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தை சொல்லாத ஒன்றை நாம் எதிர்பார்க்கக்கூடாது. விசுவாசத்தை கர்த்தர் கனப்படுத்துகிறார்.
- ❒ சுய கட்டுப்பாடு இல்லாதவர்கள், தங்களுக்கு வரும் கஷ்டங்களெல்லாம் பிசாசினாலும், மற்ற மனிதர்களாலும், சூழ்நிலைகளினாலும்தான் என்பார்கள். ஆனால், சுய கட்டுப்பாடு உள்ளவர்கள், தங்களுக்கு நேரிடும் கஷ்டங்களெல்லாம் தாங்கள் சாத்தானோடு ஒத்துழைத்தால் மாத்திரமே என்பார்கள். இவர்கள், முதலாவது, தங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவேண்டும் என்பதை அறிவார்கள். இரண்டாவது, மற்ற மனிதர்களையும், சூழ்நிலைகளையும் கர்த்தரிடத்தில் ஒப்படைப்பார்கள். மூன்றாவது, தினமும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வேதத்தின் வார்த்தையைத் தங்களது பலமாகப் பெறுவார்கள்.
- ❒ ரூத், ஒரு இடத்தில் கஷ்டப்பட்டாள். மனிதர்கள் அதை பாராமல் இருந்திருக்கலாம். ஆனால், கர்த்தர், மற்றொரு இடத்தில் அவளுடைய கஷ்டத்துக்குப் பலனாக அவளை உயர்த்தினார். அதுபோல கர்த்தர் உங்கள் கஷ்டங்களையெல்லாம் தம்முடைய கணக்கில் வைத்து பலன் தருவார்.
- ❒ நீங்கள் கற்றுக் கொள்ளும்படியான தகுதியுடையவர்களாக இருக்கிறீர்களா? இதோ இந்தக் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள். 1. மற்றவர்கள் சொல்லும் யோசனைகளை கேட்க மனந்திறந்து இருக்கிறேனா? 2. பேசுவதைக் காட்டிலும், அதிகமாகக் கேட்கிறேனா? 3. புதிதாக விஷயங்களைக் கேட்கும்போது என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்கிறேனா? 4. நான் தவறானதை செய்யும்போது அதை ஒப்புக் கொள்கிறேனா? 5. எதையும் செய்வதற்கு முன்பு யோசிக்கிறேனா? 6. கேள்விகள் கேட்கிறவனாக இருக்கிறேனா? 7. என்னுடைய அறியாமையை வெளிப்படுத்தும் கேள்விகளை கேட்கிறேனா? 8. இதுவரை நான் செய்திராத விதத்திலே காரியங்களைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேனா? 9. எதை எப்படிச் செய்யலாம் என்று வழிவகைகளை மற்றவர்களிடத்தில் கேட்கிறேனா? 10. மற்றவர்கள் என்னை விமர்சிக்கும்போது என்னை பாதுகாக்கும்படி பதில் சொல்கிறேனா? அல்லது வெளிப்படையாக அதைக்கேட்கிறேனா? வேதம் சொல்கிறது: மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்; ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் (நீதிமொழிகள் 12:15).
- ❒ கர்த்தருடைய வேதத்திலுள்ள எல்லா வாக்குத்தத்தங்களும் எனக்குச்



சொந்தமானவை என்று சிலர் சொல்லுவார்கள். உண்மைதான். ஆனால், ஒவ்வொருவருடைய அழைப்பும் வேறுபட்டது. ஒவ்வொருத்தரையும் கர்த்தர் ஒவ்வொரு விதத்திலே பயன்படுத்துகிறார். அதுபோல உங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள வாக்குத்தத்தங்களும் வேறுபடும். உங்களுக்கென்று உள்ளதை வேதத்தை நன்கு படித்து தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிரசங்கத்தைக் கேட்கும்போது, கர்த்தர் அந்த பிரசங்கம் மூலமாக உங்களிடத்தில் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனமாகக் கேளுங்கள். உங்களுக்கு பக்கத்தில் உள்ளவர்களுக்கு வேறு ஒன்றை கர்த்தர் வெளிப்படுத்துவார்.

- ❒ நீங்கள் யார்? மற்றவர்களுக்குப் பிரியமாக வாழ்கிறீர்களா? மற்றவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கலாம். ஆனால், கர்த்தருடைய பார்வையில் எப்படி இருக்கிறீர்கள்? மற்றவர்கள் செய்யும் எதை நீங்கள் இலகுவாகச் செய்கிறீர்கள்? அதுவே உங்களது பலம். அதில் முழு கவனத்தைச் செலுத்துங்கள். இடது,வலது திரும்பாதீர்கள்.
- ❒ உங்களது கடந்த கால கசப்புகள், உங்களை தடை பண்ண அனுமதிக்காதீர்கள். மோசேயை கர்த்தர் எப்படி வல்லமையாகத் தமக்காகப் பயன்படுத்தினார் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படிப்போல உங்களையும் கர்த்தரால் பயன்படுத்த முடியும். மற்றவர்களால் புண்படுத்தப்படுகிறீர்களா? அவற்றை மேற்கொள்ளுங்கள். தோல்வியா? அதை மேற்கொள்ளுங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டே இருங்கள். உங்களை குறைசொல்பவர்களுக்கு மேலானவர், பெரியவர் கர்த்தர். நீங்கள் செய்யும் மலைபோன்ற பெரிய காரியங்களுக்கும் பெரியவர் அவர். உங்களது பாரங்கள, வருத்தங்களைக் காட்டிலும், பெரியவர் நம் கர்த்தர். அவர் உங்களுக்கென்று கொடுத்துள்ள வேலையைச் செய்யுங்கள். விசுவாசத்தோடு இருங்கள்.
- ❒ உங்களது ஆசீர்வாதம் ஏதாவது தடைபடுகிறதா? காலதாமதமாகிறதா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் சித்தமில்லாமல் ஒன்றும் நடக்காது. உங்களுக்கு நன்மையையே செய்கிறார். ஆபத்துக்கு உங்களை விலக்கிப் பாதுகாக்கிறார்.
- ❒ நீங்கள் கஷ்டப்படும்போது கர்த்தருக்கு நன்றி செலுத்துவீர்களென்றால், அதுவே கர்த்தரை நம்புவதை வெளிப்படுத்துவதாகும். யோனா, மீனின் வயிற்றிலிருந்து கர்த்தருக்கு நன்றி செலுத்தினான். உடனே, மீன் அவனைத் தரையிலே கொண்டுவந்துவிட்டது. நீங்கள் நன்றி சொல்லுவது, இரண்டு காரியங்களைச் செய்கிறது. 1. உங்கள் விசுவாசத்தை உயர்த்துகிறது. ஏனென்றால், நாம் தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்கிறோம். நமது சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும், கர்த்தர் நமக்காகக் காரியங்களை நடப்பிக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். பிரச்சனைகளில் உழன்றுகொண்டிராமல், கர்த்தரை நோக்கி பார்த்து, பரிகாரத்தைத் தெரிந்து கொள்கிறோம். சீக்கிரத்திலே அந்த பிரச்சனையிலிருந்து வெளிவருகிறோம். 2. நமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகிறோம். இயேசு கிறிஸ்து, மரித்துப்போன வாசருவை உயிர்த்தெழ வைப்பதற்கு முன்னரே பிதாவிற்கு நன்றி செலுத்துகிறார். எவையெல்லாம் நடக்காது என்று நினைக்கிறீர்களோ அவற்றையெல்லாம் உயிர்ப்பிக்கும்படியாக இருக்கும், நீங்கள் முன்னரே நன்றி செலுத்தும்போது.
- ❒ உங்களது வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்ளுங்கள். ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் ஓய்வு எடுங்கள். குடும்பத்தினரோடு இருக்கவேண்டிய நேரத்தில் அவர்களோடு இருங்கள். அதிகமாக உழைக்க வேண்டும் என நினைக்காதீர்கள். வேலை செய்ய வேண்டிய நேரத்தில் வேலை செய்யுங்கள். அப்படி இல்லையென்றால், சின்ன சின்ன காரியத்திற்கும் கோபம், எரிச்சல் வரும். நமது தாலந்துகள், பொறுப்புகள், சூழ்நிலைகள், வேறு வேறாக இருக்கலாம். ஆனால், மேலே சொன்னவை எல்லோருக்கும் ஒன்றுதான்.




பின்பு அவன் சர்வாங்க தகன பலிக்கு ஆட்டுக்கடாவைக் கொண்டு வந்தான்;அதின் தலையின் மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்தான்.

பின்பு பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக் கடாவைக் கொண்டு வந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

பின்பு அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் பூசினான்.

- லேவியராகமம் 8:18,19,22,23

மோசே, ஆட்டுக்கடாவின் இரத்தத்தை, முதலில் பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளிக்கிறான். பின்னர், ஆசாரியனாகிய ஆரோனின் மீது பூசுகிறான்.தேவனுடைய சந்நிதியில் இது நடக்கிறது. தேவனுக்கு முன்பாக நடக்கிறது. தேவன் சொன்னபடி மோசே செய்கிறான். மற்ற ஆடுகளின் இரத்தத்திற்கும், தேவனுடைய சந்நிதியில் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக பலியிடப்படும் ஆட்டின் இரத்தத்திற்கும் வித்தியாசம் உண்டு. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பில்லை என்ற தேவனுடைய பிரமாணத்தின்படி சிந்தப்படுகிற இரத்தம் மேன்மையானது.

இதை ஆசரிக்கும் ஆசாரியன், மற்றவர்களின் பாவங்களுக்காகவும், தன்னுடைய பாவத்திற்காகவும், மறுபடி மறுபடியுமாக செலுத்த வேண்டியிருந்தது. அதனாலேயே தேவன் தம்முடைய ஒரே குமாரனை நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அனுப்பினார்.



இயேசு கிறிஸ்து, நம்முடைய பாவங்களையெல்லாம் தம்மேல் சுமந்தார். நமக்கு வரவேண்டிய தண்டனைகளையெல்லாம் அவர் ஏற்றுக் கொண்டார். அதற்காகவே சிலுவையில் அடிக்கப்பட்டார்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்.

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும், தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

- ஏசாயா 53:5-7

எப்படி மனுஷனுடைய பாவங்களுக்காக ஆட்டின் இரத்தத்தை சிந்தி பாவங்கள் மன்னிக்கப்பட்டதோ, அதேபோல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் நம்முடைய பாவங்களெல்லாம் சுமத்தப்பட்டு, நமக்குப் பதிலாக அவர் இரத்தம் சிந்தினார். நம்மை பாவத்திலிருந்தும், பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்தும் மீட்டு எடுத்தார். அல்லேலூயா! அதனால்தான், யோவான் ஸ்நானகன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை, ஆட்டுக்குட்டியானவர் என்று குறிப்பிடுகிறான்.

நாம் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்யும்போது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களெல்லாம் கழுவப்பட்டு பரிசுத்தமுள்ள இருதயத்தை உடையவர்களாகிறோம். அதுவரை நம்முடைய பாவங்களினால் குற்ற மனசாட்சி உடையவர்களாய் இருந்த நாம் சுத்த மனசாட்சி உடையவர்களாகிறோம். இப்போது நாம் சுத்த இருதயமும், சுத்த மனசாட்சியும் உள்ளவர்களாய் இருப்பதால், சாத்தான் நம்மை தேவனிடம் குற்றப்படுத்த முடியாது.

இந்த நம்பிக்கையை நாம் எப்போதும் உடையவர்களாய் இருக்க வேண்டும். அதனால் நாம் ஒவ்வொரு நாள் ஜெபிக்கும்போதும், முதலாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நம் பாவங்கள் கழுவப்பட ஜெபிக்க வேண்டும். (நமக்கு தெரியாமலே அதாவது இது பாவம் என்று தெரியாமலே பாவம் செய்திருக்கலாம்). இரண்டாவது, அவருடைய இரத்தத்தை, நம் மீதும் நம் பிள்ளைகள் மீதும், நம்முடைய எதிர்காலத்தின் மீதும், தரிசனத்தின் மீதும், வீட்டின் மீதும், சுகத்தின் மீதும், சமாதானத்தின் மீதும், கையிட்டு செய்கிற எல்லா பிரயாசத்தின் மீதும் பூசி ஜெபிக்க வேண்டும். இயேசுவின் இரத்தம் பாதுகாக்கும். நம்மையும், நமக்குள்ள எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்குள்ளாகக் கொண்டுவர வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பூசி ஜெபிக்க மறவாதிருங்கள். ஆமென்!